ஸ்ரீ

# சரஸ்வதி ஒருபா ஒருபது.

இது

பச்சையப்பமுதலியார் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்,

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

இயற்றப்பட்டு,

அக்கம்மாள்பேட்டை

மஹாதேவசெட்டியாரால்

மதராஸ் டைமண்ட் பிரேஸில்

பதிப்பிக்கப்பட்டது.

[முதற்பதிப்பு.]

1910.

*Copy-right Registered.*

விலை பை - 9.

ஸ்ரீ

## தற்சிறப்புப் பாயிரம்.

நேரிசை வெண்பா.

திருவாரு நாமகட்குச் சீரொருபா பஃதென்
உருவாரு மாலை யுரைத்தான்—மருவாரும்
பூவந்த கோன்றந்தை பொன்னடிக்கே புந்தியுறுங்
கோவிந்த ராசன் குறித்து.

இஃது

அயன்புரம் வித்துவான் - ஸ்ரீமான்
க. அ. வரதராஜநாயகர் இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED 15 JUL 1912
MADRAS

ஸ்ரீ

# சரஸ்வதி ஒருபா ஒருபது.

§

## தற்சிறப்புப் பாயிரம்.

நேரிசை வெண்பா.

வெள்ளை மலரிருப்பு வெள்ளை யுடையுடுப்பு
வெள்ளை மணிவடமே வேய்வதுவும்—வெள்ளை
மனவாச னத்தினிடை வாழ்கின்ற மங்கை
அனவாசப் பூத்தா ளரண்.

## நூல்.

நிலமண்டில ஆசிரியப்பா.

கார்வளர் வானக் கலைநிறை மதியன
சீர்வளர் தவளச் செழியவோர் மலர்தான்
எழின்மிகு செம்மல ரிரண்டினை யீன்றுங்
கொளிர்தரூஉ நினாதெழி லுறுபதத் துணையென்
அன்புறு நெஞ்சகத் தமைத்துநன் கேத்துபு
நின்விழி யருளெனு நெடும்பெரும் புணைகொடு
வெந்துய ராமரும் வியன்பெருங் கடல்கடந்
தந்தமி லின்ப மாங்கரை யடைவான்
விழைந்தனெ னடியனவ் விழைவளித் தருள்சூல்
தழைந்துவான் றோன்றிய தண்கா ரிடையே
களங்கமற வரூஉங் கலைநிறை மதியொன்
றுளதெனிற் பொரூஉநின் னொண்முகப் போதின்
வாய்நிரை முத்தான் மாமல ராசனத்
தாய்மொழி வேத வம்புயத் தவர்தமக்
கவர்தமை முன்ன ரருளிய தாதையின்
தவர்புகழ்ந் தேத்துறச் சார்ந்தபல் பெயர்களின்
ஒன்றுறச் செய்தவ ரொள்ளிய நாவிடை
நாற்றிசைத் தேவரு நற்றவ ருந்தொழ
வீற்றிருந் தருளுநல் வியன்கலை மானே! (1)

## நிலமண்டில ஆசிரியப்பா.

| | |
|---|---|
| அடிமோனைத் தொடை. | மானன நோக்கமும் வான்பிறை நுதலு<br>மாதவன் றனுவென வளைந்துறு புருவமு<br>மாசிலா முத்தென மாண்பமை முறுவலு<br>மாமலர் புரைதரு மகிழ்திரு வதனமு<br>மாமன விருளொழி மலரடித் துணையும்<br>வாய்ந்தந லன்புடன் வழுத்துநர்க் குளதாம் |
| அடியெதுகைத்தொடை | வெண்டாமரையிலம் விழைந்துறையணையே!<br>தண்டா வின்பத் தனிப்பெரும் பதமே. (2) |

இதின் முதல் ஆறடிகளில் முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையால் அடிமோனைத்தொடையும், நான்காமடியோடு ஐந்தாமடியும், ஏழாமடியோடு எட்டாமடியும் இரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் அடிஎதுகைத்தொடையும் வந்தமை காண்க.

---

## நிலமண்டில ஆசிரியப்பா.

| | |
|---|---|
| அடிமுரண் டொடை. | பெரும்பத மன்புடன் பேணினர்க்களிக்குஞ்<br>சிறுமென் மலரடிச் செஞ்சொற் செல்வி! |
| அடிஅளபெ டைத்தொடை | பாஅ வியனற் பண்புடைக் கலைகளை<br>மேஎ வுறவென் மனத்திடை யிருத்தி |
| அடிஇயைபுத் தொடை. | தீதுறு வினைகளின் வலியறத் தீர்த்து<br>மேதகு நெறியினர் வியன்குழுச் சேர்த்து |
| | மையறு புலமையின் வாய்ப்புறவருள்கெனச்<br>செய்யநின் பதத்துணைபற்றினென்சேர்ந்தே. |

இதின் முதலடியோடு இரண்டாமடியில் முதற்சொல் முரணி வந்தமையால் அடிமுரண்டொடையும், மூன்றாமடியோடு நான்காமடியின் முதலில் அளபெடை யொன்றிவரத் தொடுத்தமையால் அடியளபெடைத்தொடையும், ஐந்தாமடியோடு ஆறாமடியின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் அடியியையுத்தொடையும் வந்தமை காண்க.

## 1. மோனைத்தொடை விகற்பம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

இணை. சேர்வெனச் சேர்ந்து நின்னடிக் கமலம்
பொழிப்பு. அடியனே னெஞ்சுற மன்புடன் பணிந்தனெனன்
ஒரூஉ. பொய்ம்மையொன் றில்லோர்தம்மெழிற் புந்தியின்
கூழை. மன்னிய மகிழ்வே! மாசறு செல்வமே!
மேற்கதுவாய். ஒள்ளிய நன்னெறி யுற்றவர்க் குறுதியே!
கீழ்க்கதுவாய். அவிர்மதி யனைய திருநுத லாசி!
முற்று. மெல்லியன் மென்மொழி மெய்யருண் மேன்மை
நீங்கலி னல்லெழி லோங்கிய வாணி!
மிடியெனும் வெந்துய ரணுகா வகையால்
அடியனே யன்புட னுளனின் கடனே. (4)

இதில் இணைமோனை முதலிய மோனைத்தொடை விகற்பங்கள் எழும் வந்தமை காண்க.

---

## 2. இயைபுத்தொடை விகற்பம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

கருதிய வடியார் கதியே! நிதியே! இணை.
பொருவறு மணியே! பொன்முடி யணியே! பொழிப்பு.
கலையே! யவர்தங் கண்மன நிலையே! ஒரூஉ.
தோய்மொழி யனையே! துடியே யிடையே கூழை.
மலையே முலையே புருவஞ் சிலையே மேற்கதுவாய்.
கனியே யிதழுங் கலையே விழியே கீழ்க்கதுவாய்.
மதியே கறையே யிலையே விணையே முற்று.
வனதந் தனக்கென வழுத்துபு நல்லோர்

போற்றுநின் னடியென் புந்தியி னிறுத்தி
நற்கலை யறியு நல்லறி வருளே. (5)

இதில் இணையியைபு முதலிய இயைபுத்தொடை விகற்பங்கள் எழும் வந்தமை காண்க.

---

## 3. எதுகைத்தொடை விகற்பம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

| | |
|---|---|
| இணை. | நற்றவத் துற்ற நயத்தகு செம்மையோர் |
| பொழிப்பு. | செற்றமின் மனமல ருற்றுவா மூனமே! |
| ஒரூஉ. | பற்றினர் நின்னை வன்றுயர் பற்றல் |
| கூழை. | அற்றனர் முற்றுங் கற்றன ராய்நற் |
| மேற்கதுவாய். | சுற்றமுந் துணையுஞ் சுற்றுற வுற்றுப் |
| கீழ்க்கதுவாய். | பற்றலர்ச் செற்றுப் பகருநற் கொற்றம் |
| முற்று. | பெற்றட லுற்று மற்றிணை யற்று |
| | வாழ்குவ ரென்பது மாண்புறு வெண்மலர் |
| | சேர்ந்துறை யமுதே! சிறந்தவர்மொழியே. (6) |

இதில் இணையெதுகை முதலிய எதுகைத்தொடை விகற்பங்கள் எழும் வந்தமை காண்க.

---

## 4. முரண்டொடை விகற்பம்.

இணைக்குறளாசிரியப்பா.

| | |
|---|---|
| இணை. | சிறியேன் பெரியோர் செய்திற மறியேன் |
| பொழிப்பு. | சுருங்கிய வெழுத்திற் பெருகிய பொருள்பல |
| ஒரூஉ. | அடக்கிய நூற்களா லகந்தையை யடக்கேன் |
| கூழை. | கருமையுஞ் செம்மையும் வெண்மையு மார்விழி! |
| மேற்கதுவாய். | தாவியுஞ் சிறிதே தங்கியு மலையு |
| | மனநிலை நிறுத்தி |

கீழ்க்கதுவாய். நட்பும் பகையு நவிலுறு நொதுமலு
நாடு கிலராய்

முற்று. விருப்பும் வெறுப்பும் விழைசுக துக்கமும்
இலரா யமைந்துறும்
பெரியோர் தம்புகழ் பேசலு மில்லேன்
நான்முகத் தேவனன் ஞக்கொளுந் தேனே!
நான்பெற லென்றே நின்னரு ணலமே. (7)

இதில், இணைமுரண் முதலிய முரண்டொடை விகற்பங்கள் ஏழும் வந்தமை காண்க.

---

## 5. அளபெடைத்தொடை விகற்பம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

இணை. மேஎ வாஅன் விண்ணவன் வியப்புறப்
பொழிப்பு. பூஉ வானம் போஒ யளந்தவன்
ஒரூஉ. சாஅர் மேன்மை தாநின் ஞஅல்
கூழை. தூஉ மாஅண் போஒ தகமும்
மேற்கதுவாய். நாஅன் முகவ ஞஅ வாஅம்
கீழ்க்கதுவாய். மாஅச் சீஇ ரிடமுஞ் சாஅர்
முற்று. வாஅ ஞஅர் மாஅல் போஒல்
ஓதி கொண்டொளி ரொண்கலை மாதே! (8)

இதில் இணையளபெடை முதலிய அளபெடைத் தொடை விகற்பங்கள் ஏழும் வந்தமை காண்க.

## அந்தாதித்தொடையும், இரட்டைத்தொடையும்.

நேரிசையாசிரியப்பா.

மாதே! யென்றுயர் மாற்றிடு மதியே!
ஏதமா ருள்ளத் திருளொழித் திடுஞ்சுடர்!
சுடர்மிகு பொற்குழை தோய்விழி யுடையாய்!
உடையா தென்று மோங்கருள் புரிநீ
உடையா தென்று மோங்கருள் புரியினீ
மன்னுமே மன்னுமே மன்னுமே மன்னும்
என்னிட நீங்கா தென்றும்
ஒப்பிலா நலஞ்செயு மொண்பெருந் திருவே. (9)

இதில் முதல் ஐந்தடிகளில் எழுத்து, அசை, சீர், அடி என்னும் நான்குவகை அந்தாதித்தொடையும், ஆறும் அடியில் இரட்டைத் தொடையும் வந்தமை காண்க.

---

## செந்தொடை.

Q25:417
M0

நேரிசை யாசிரியப்பா.

பெருந்திரு வளிக்கு நற்கலை மங்கை
புலவோ ராமரும் பைங்கூழ்
செழிப்புற வருண்மழை பொழிதனிக் காரே. (10)

இது மோனைமுதலிய தொடையும், தொடை விகற்பங்களும் ஆம் அவற்றுள் ஒன்றும் வராமல் தொடுக்கப்பட்டமையின் செந்தொடையென்பது.